

தூத்துக்குடி விமான நிலையம் வருகை தந்த தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர்,கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### கல்லூரிகள் போதைப்பொருள் விற்பனை மையங்களாக மாறி வரும் நிலையில்

# முதல்வர் வாய் திறக்காமல் கள்ள மௌனத்தில் இருப்பது ஏன்?

## முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

சென்னை, ஆக.17-

“கல்லூரிகள் போதைப் பொருள் விற்பனை மையங்களாக மாறிவரும் நிலையில் முதல்வர் விஜய் வாய் திறக்காமல் கள்ள மவுனத்தில் இருப்பது ஏன்?” என்று முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

கோவை, தனியார் கல்லூரி மாணவர்களிடையே அதிகரித்துள்ள போதைப் பொருள் பயன்பாடு குறித்து காவல் துறைக்கு தகவல் கொடுத்ததாக மாணவர் அமுதன் போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்படுத்தும் 20 பேர் கொண்ட மாணவர் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்..

அடுத்த 3 தினங்களில் சென்னை திருவெற்றியூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் தினேஷ் போதைப்பொருள் பயன்படுத்தியதை காட்டிக்கொடுத்ததாக சக மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர் கும்பல் 30 பேர் சேர்ந்து ஈவிரக்கமின்றி அடித்து கொன்ற சம்பவத்தை பார்க்கும்போது தமிழ்நாட்டு



காவல்துறை பயனற்ற சினிமாவில் தோன்றும் காவல்துறையாக மாறி விட்டதோ ? என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது CM sir?

அதுபோல் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் Neet கோச்சிங் சென்ற மாணவிகள் வகுப்பறையிலேயே மது அருந்திய கொடுமை காவல்துறையை கையில் வைத்திருக்கும் உங்கள் கவனத்திற்கு வரவில்லையா? அல்லது ஒட்டுமொத்த காவல்துறையையும் உங்கள் நண்பர்களிடமே கொடுத்துவிட்டு தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா CM sir ?

தமிழ்நாட்டில் பெரும்பாலும் உங்கள் கட்சியினர் தான் காவல்துறை ஒத்துழைப்போடு தங்கு தடையின்றி மாணவமாணவிகளிடம் போதை பொருட்களை விற்பனை செய்து வருவது உங்களுக்கு தெரியுமா? இதுவரை தடுக்க எந்த முயற்சியும் செய்யாமல் உங்கள் கட்சியினர் மூலம் தமிழக மாணவ மாணவிகளை சீரழிக்க துணிந்து விட்டீர்களா CM sir ?

முன்னாள் முதல்வர் முகஸ்டாலின் மக்களை தேடி மருத்துவம் கொடுத்தார்.. நீங்களோ மாணவ மாணவிகளைத் தேடி மதுவை கொடுக்குறீர்களே! கல்லூரிகளை போதைப் பொருள் விற்பனை மையங்கள் ஆக்கி வகுப்பறைகளை மது குடிக்கும் பார்ஆக மாற்றிய உங்களையும் உங்கள் கட்சி யினரையும் மக்கள் மன்னிப்பார்களா ? இதற்கு பிறகும் வாயைத் திறக்காமல் கலக்கத்தில் மயக்கத்தில் கள்ள மௌனத்தில் இருக்குறீர்களே CM sir?

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# திருச்செந்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் சுதந்திரதின விழா!

## முன்னாள் அமைச்சர் அனிதா இராதா கிருஷ்ணன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்!

திருச்செந்தூர், ஆக. 17-

திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினருமான அனிதா சு.ராதாகிருஷ்ணன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இந்தியாவில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தேசிய கொடியை ஏற்றிய நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலக பொறுப்பாளர் அக்னல் பீரீஸ் தலைமை வகுத்தார், துணைப் பொறுப்பாளர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினருமான அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்புகளை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், திருச்செந்தூர் நகராட்சி தலைவர் சிவஆனந்தி, ஒன்றியச் செயலாளர் செங்குழி ரமேஷ், நகரச் செயலாளர் வாள்சுடலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் செந்தில் குமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஸ்ரீதர் ரொட்ரிக்கோ, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த் ரொட்ரிக்கோ, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் வேலம்மாள், மகாராஜன், அக்னல் பீரீஸ், கானம் முன்னாள் பேரூராட்சி தலைவர் செந்தமிழ் சேகர், தளபதி எடிசன் ஒன்றிய பொறுப்பாளர் மதன்ராஜ், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மகாவிஷ்ணு, திருச்செந்தூர் ராஜசேகர், மகராஜன், அஜிதா அக்னல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி

# 13 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஆக. 17 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்,நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 13 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வட்டக் கழக பொறுப்பாளர் முருகன் தலைமையில் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதிச் செயலாளர் ஜவகர் முன்னிலையில் (14.08.2026 வெள்ளிகிழமை) அன்று மாலை நாகர்கோவில், வடசேரி கொம்மண்டையம்மன் கோவில் தெரு பகுதியில் நடைபெற்றது. கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.



கூட்டத்தில் மாநகர தி.மு.க. அவைத் தலைவர் பன்னீர் செல்வம், மாவட்ட பிரதிநிதி அணஞ்சபெருமாள், மாநகர பிரதிநிதிகள் தனராஜ், ஜனார்த்தனன், மாநகர ஆதிதிராவிட அணி அமைப்பாளர் மதுபாலன்கழக நிர்வாகிகள் பாவநாசம், செல்வம், நாகராஜன், ராஜேந்திரன், ஆறுமுகம், நவீன், சரிதா, நேசமணி, வசந்தி உட்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# திருபுவனம் ஒன்றியம் - பேரூர் கழக செயற்குழுக் கூட்டம்!

## சேங்கை மாறன் சிறப்புரை!

திருப்புவனம், ஆக.17-

திருப்புவனம் மேற்கு. தெற்கு. ஒன்றியம் மற்றும் பேரூர் திமுக செயற்குழு கூட்டம் மருது பாண்டியர் திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் இளங்கோவன் தலைமையில். ஒன்றிய கழக செயலாளர் வசந்திசேங்கை மாறன் முன்னிலையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்களை மாவட்ட கழக துணை செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கைமாறன் வாசித்தார்.

தீர்மானங்கள். தமிழக விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளில் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதாக சொல்லி ஆட்சிக்கு வந்த தவெக அரசு கூட்டுறவு கடன்களை முழுமையாகதள்ளுபடி செய்யாத அரசை ஒன்றிய கழகத்தின் சார்பில் கண்டனத்தை தெரிவித்து தீர்மானிக்கப்படுகிறது.

திருப்புவனத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் புதிய பஸ் நிலைய அமைக்க உத்தரவிட்டதை தற்போதைய தமிழக அரசு கிடப்பில் போடாமல் புது பஸ் நிலைய அமைக்க வலியுறுத்தி தீர்மானிக் கப்படுகிறது.



இக்கூட்டத்தை கலந்து கொண்டவர்கள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏனாதி ராமலிங்கம். மேல வெள்ளூர் பஞ்சாட்சரம். சேங்கை சாமி,சங்கங்குளம் ஈஸ்வரன். லாடனேந்தல் சுப்பையா. புலியூர் ரவி. மாங்குடி வெங்கடேசன். மடப்புரம் மகேந்திரன். கரிசல்குளம் ராமு. கவுன்சிலர் பாலகிருஷ்ணன். கொத்தங்குளம் குமரன். இளைஞர் அணி அமைப்பாளர் அறிவுகரசு.

நகர் இளைஞர் அணி அமைப்பாளர். கவுன்சிலர் கண்ணன். துணை அமைப்பாளர்கள் காளிதாஸ். முத்துக்குமார், திருப்பதி. எஸ்.ஏ காளிதாஸ். தொண்டரணி ராஜா மாணவரணி பாண்டியர் கிருஷ்ணன் தகவல் தொழில் நுட்ப அணி. ராஜ்மோகன் புவனேஸ்வரன், பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### தென்காசி மாவட்டம் கடையநல்லூர் - செங்கோட்டை

# ரயில்நிலையத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பீர்!

## இரயில்வே பொது மேலாளரிடம் தி.மு.இராசேந்திரன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

தென்காசி.ஆக.17-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர்,

செங்கோட்டை இரயில் நிலையங்களில்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் தெற்கு இரயில்வே பொது மேலாளர் சுப்பாராவிடம் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்

தி.மு.இராசேந்திரன் நேரில் சந்திப்பு கோரிக்கை மனு அளித்துள்ளார்.

பொது மக்கள் பயணிகள் நலன் கருதி,

கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.அதன் விபரம் வருமாறு.

1)கடையநல்லூர் தொகுதியில் அமைந்துள்ள கடையநல்லூர் ரயில் நிலையத்தில் லிப்ட் வசதி இண்டிகேட்டர் மேற்கூரை நீட்டிப்பு வசதி,கூடுதல் இருக்கை மற்றும் விளக்கு வசதிகள் செய்திட ஏற்கனவே 12.06. 2026 அன்று கொடுத்த கடிதத்தை நினைவூட்டி அப்பணிகளை தொடங்கிட வேண்டியும்.

2) செங்கோட்டை ரயில் நிலையத்தை 05.06.2026 அன்று பார்வையிட்டதையும் 5 வது பிளாட்பார்ம் முழுமைப்படுத்துதல் விடுபட்ட பகுதியில் பிளாட்பார்ம் அமைத்தல்,மின் விளக்குகள் சீரமைத்தல் உட்பட பயணிகள் தெரிவித்த கோரிக்கைகளையும்.

3) புதிதாக இயக்கப்படும் தென்காசி சென்னை தாம்பரம் வாராந்திர ரயிலை ஒரு இலட்சம் மக்களுக்கு பயனளிக்கும் கடையநல்லூர் ரயில் நிலையத்தில் நின்று செல்ல உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்குமாறும்,அந்த ரயிலை நீட்டிக்க வேண்டியும்.

4) செங்கோட்டைதிருநெல்வேலி பயணிகள் ரயில் நேரத்தை,அதில் பயணம் செய்யும் அரசு ஊழியர்கள், இதரப் பணியாளர்கள் நலன் கருதி மாற்றியமைத்து உதவிடவும்.

தவிர,செங்கோட்டை கடையநல்லூர் பகுதி ரயில் நிலையங்களை நேரில் பார்வையிட வருமாறும்,குற்றாலம், மேக்கரை நீர் வீழ்ச்சிகளில் நீராட வருமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

கோரிக்கை மனுக்களை ஒவ்வொன் றாக படித்துப் பார்த்த பொது மேலாளர் தக்க முறையில் ஆவண செய்வதாக உறுதி அளித்து உள்ளார். என்றும் கோரிக்கை மனுவில் அவர் கூறியுள்ளார்.



நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு,விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்கண்டேயன் மூவர்ண கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.நிகழ்வில் பள்ளியின் தலைமையாசிரியர் பொறுப்பு பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி,ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, இம்மானுவேல்,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன்,மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கேப்டன் கேசவன், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், கழக நிர்வாகி ஆந்திரா கருப்பசாமி உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள்,மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.ஏ. மதியழகன்

### ஆகஸ்ட் 17 (1983)



தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.

இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.

தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**